# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு நிர்மாணத்துக்கு இந்தியா 600 மில்லியன் இலங்கை ரூபா நன்கொடை உதவி</u>**

இந்திய அரசாங்கத்தின் 600 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான நன்கொடை உதவி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஒன்றை நிர்மாணிப்பதற்கும், அதற்கான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்குமான திட்டப்பணி ஒன்றிற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று 2025 செப்டெம்பர் 9ஆம் திகதி இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜயசிங்கே ஆகியோரால் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கௌரவ டாக்டர் நளிந்த ஜயசிங்க முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

2. இந்தத் திட்டத்தின் கீழ், இரண்டு மாடிகளை கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு நிர்மாணிக்கப்பட்டு அதற்கு தேவையான சகல மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படும். இதன் மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான முக்கிய தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன் இப்பிராந்தியத்தில் உள்ள மக்களின் பெறுமதியான உயிர்கள் தக்க நேரத்தில் வழங்கப்படும் மருத்துவ உதவிகள் மூலம் பாதுகாக்கப்படும். அது மட்டுமல்லாமல் சராசரி நாளாந்த உள்நோயாளர்கள் மற்றும் தற்போது காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கை இடையிலான இடைவெளி குறைக்கப்பட்டு வைத்தியசாலையின் மருத்துவ சேவை கட்டமைப்பும் இதன் மூலமாக வலுவாக்கப்படும்.

3. இலங்கையில் சுகாதாரத் துறையில் இந்திய அரசாங்கத்தால் உயர் பெறுபேற்றினைக் கொண்ட அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்தத் திட்டமும் அந்த பட்டியலில் இணைந்து கொள்கின்றது. குறித்த சுகாதாரத் துறை சார்ந்த திட்டங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் சுவசெரிய 1990 அம்புலன்ஸ் சேவை கொவிட் - 19 பெருந்தொற்று காலப்பகுதியில் வழங்கப்பட்ட மருத்துவ உதவிகள், டிக்கோயாவில் நிர்மாணிக்கப்பட்ட 150 கட்டில் வசதிகளை கொண்ட மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியவற்றை தரம் உயர்த்துவதற்காக வழங்கப்பட்ட ஆதரவுகள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிய சத்திர சிகிச்சை பிரிவு நிர்மாணம் உள்ளிட்ட பல திட்டங்கள் அடங்குகின்றன. மேலும் சுவசெரிய 1990 அம்புலன்ஸ் சேவையை விஸ்தரிப்பதற்கு வழங்கப்பட்ட இந்திய நன்கொடை உதவி திட்டம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் 4 மாடிகளை கொண்ட மருத்துவ விடுதி வளாகம் நிர்மாணம் ஆகிய திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

************

**கொழும்பு**
**09 செப்டெம்பர் 2025**